மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி.

**OS No. 170 /20 24**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் திருமதி. S.தனலட்சுமி Gr –III Bench Clerk என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : கருப்பணன் (பி. வா.சா. 4 )<br>க/பெ.<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

**16.06.2026.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி கருப்பணத்தேவர் எனது அப்பா என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் 5, 6 பிரதிவாதிகள் மற்றும் இறந்து போன மாசாணம் என்றால் சரிதான். மாசனத்தின் மனைவிதான் 7ம் பிரதிவாதி என்றால் சரிதான். மாசனத்தின் மகள் 8ம் பிரதிவாதி என்றால் சரிதான். எனது அம்மா பெயர் சக்கரை அம்மா என்றால் சரிதான். எனது தந்தை 1ம் பிரதிவாதிக்கு 1ம் வாதியானவர் 2வது மனைவி என்றால் சரிதான். எனது அம்மாவும் 1ம் வாதியும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். எனது அம்மா இறந்த பிறகு ஒன்றாம் வாதியை எனது தந்தை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான், ஒன்றாம் வாதி எனது அம்மா இறந்த பிறகு பிள்ளைகளை பார்ப்பதற்காக எங்களது வீட்டிற்கு வந்தார், அப்போது இருவருக்கும் இடையில் பழக்கம் ஏற்பட்டு திருமணம் ஆனது. எனது தந்தை ஒன்றாம் பிரதிவாதிக்கும் ஒன்றாம் வாதிக்கும் பிறந்த மகன் தான் இரண்டாம் வாதி என்றால் சரிதான். எனது தாயார் இறக்கும்போது எனக்கு சுமார் 11 வயது இருக்கும். எனது தந்தை ஒன்றாம் வாதியுடன் திருமணம் செய்து கொண்ட பின்னர் அவர்கள் இருவரும் சுமார் 15

வருட காலம் சேர்ந்து சுமுகமாக தான் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் இருவரும் சுமார் மூன்று ஆண்டுகள் மட்டுமே சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள். எனது தந்தை இந்த நீதிமன்றத்தில் என்ன சாட்சியம் அளித்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு 2008 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் 2014 ஆம் வருடம் ஒரு இடைநிலை மனு தாக்கல் செய்து என்னையும் ஒரு தரப்பினராக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், இது எங்கள் குடும்பத்தின் பூர்விக சொத்து என்றும் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், ஒரு சென்ட் அளவுள்ள காலி மனை இடம் என்னுடையது என்று மனுதாக்கல் செய்தேன். என்னுடைய சித்தி ஒன்றாம் வாதி எந்த சொத்துக்காக என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியும்.

2. 1991 ஆம் வருடம் ஒன்றாம் வாதியும் ஒன்றாம் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து ஒரு சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றும், அதில் ஒன்றாம் வாதியான எனது சித்திக்கு பாதி பாகம் உள்ளது என்று கோரி ஒரு வழக்கை ஒன்றாம் வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் மேற்படி சொத்தை நானும் எனது தந்தையும் எனது தம்பியும் மூன்று பாகங்களாக பிரித்து சொத்துகளை விற்று விட்டோம். மேற்படி சொத்தை நானும் எனது தந்தையும் எனது தம்பியும் மூன்று பாகங்களாக பிரித்து சொத்துகளை விற்று விட்டோம் என்ற சங்கதியை எனது நிரூபணவாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். ஒன்றாம் பிரதிவாதியின் வாரிசு என்ற அடிப்படையில் என்னையும் ஒரு தரப்பினராக இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. எனது உடன்பிறந்த சகோதர சகோதரிகளும் இந்த வழக்கில் தாவா சொத்தை ஒன்றாம் வாதிக்கு கொடுப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று கட்சி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான், ஐந்தாம் பிரதிவாதியின் மகளை இரண்டாம் வாதி திருமணம் செய்துள்ளதால் அவர்கள் அவ்வாறு கட்சி செய்கிறார்கள். நான் 2014 ஆம் ஆண்டு தாக்கல் செய்த இடைநிலை மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் அதை எதிர்த்து எந்தவித மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த 2014 ஆம் ஆண்டு மனுவில் தாவா சொத்து பூர்விக சொத்து என்பதால் அதில் எனக்கும் ஒரு பங்கு உள்ளது என்று கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. தாவா சொத்தை ஒன்றாம் வாதியும் ஒன்றாம் பிரதிவாதியும் கூட்டாக சேர்ந்து தனி நபர்கள் கிரையம் பெற்றதால் எனக்கு அதில் எந்தவித உரிமையும் இல்லை என்று நீதிமன்றம் மேற்படி மனுவை தள்ளுபடி செய்து விட்டது என்றால் சரிதான், ஆனால் அது என்னுடைய பூர்வீக சொத்து ஆகும். தாவா சொத்தில் எனக்கும் ஒரு பாகம் உள்ளதாக கூறி நான் தனியாக எந்தவித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் ஒன்றாம் வாதி ஒன்றாம் பிரதிவாதிக்கு ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக் கொடுத்ததாக மோசடியாக ஒரு ஆவணம் தயார் செய்யப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவின் மீது ஒரு குற்றவியல் வழக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த குற்றவியல் வழக்கில் போலீசார் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள கைரேகை ஒன்றாம் வாதியின் கை ரேகை இல்லை என்று ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அறிக்கையின் படி விருதுநகர் மாவட்ட பதிவாளர் மோசடியாக தயார் செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்து உத்தரவு பிறப்பித்துள்ள என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

5.இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் மூலம் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள கைரேகையை கைரேகை நிபுணரிடம் அனுப்பி மேற்படி கைரேகையானது போலியாக உற்பத்தி செய்யப்பட்ட கைரேகை என்று கைரேகை நிபுணர் சாட்சியம் அளித்துள்ளார் என்ற சங்கதி பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. தாவா இடத்தில் மேற்கு பகுதி புஞ்சை நிலமாகவும் கிழக்குப் பகுதி மனை இடங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். புஞ்சை நிலத்தை யார் அனுபவித்து வருகிறார் என்றால் நானும் எனது உடன்பிறந்தவர்களும் கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம். எனது தந்தை தாவா சொத்தை நான்காம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான், ஆனால் அவர் மொத்தம் ஏழு ஏக்கர், 35 சென்ட் சொத்தையும் விற்பனை செய்து விட்டார். எனது அப்பா விற்பனை செய்த சொத்தில் நான் இதுவரை எந்தவித உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான்.

6. 1ம் வாதி இந்த வழக்கில் தனக்கும் பாதி பங்கு உள்ளது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தையிடம் இருந்து கிரையம் பெற்ற 3, 4 ம் பிரதிவாதிகள் வழக்கின் உண்மையான சங்கதிகள் தெரிந்து கொண்டு இந்த வழக்கில் தோன்றாமல் உள்ளார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் ஒன்றாம் வாதி உரிமை கோருவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல, எனக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது. எங்களது குடும்ப பாகப்பிரிவினையில் ஏற்பட்ட மனப்பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு இந்த வழக்கில் வாதிகளுக்கு சொத்து சென்று விடக்கூடாது என்ற எண்ணத்தில் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, எனக்கு எனது தகப்பனார் சொத்தில் பங்கு வேண்டும். எனது தந்தையின் சொத்தில் எனக்கு பங்கு வேண்டும் என்று நான் எந்தவித தனிப்பட்ட வழக்கையும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள கிரைய ஆவணங்கள் அனைத்தும் ஒன்றாம் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னர் ஏற்பட்ட ஆவணங்கள் என்றும் அது ஒன்றாம் வாதியையும் இரண்டாம் வாதியையும் கட்டுப்படுத்தாது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

7. வழக்கு நிலுவையில் இருந்தபோது தாவா சொத்தை மூன்றாம் நபர்கள் கிரையம் பெற்றதால் அவர்களை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் பாதி பங்கு தான் கூறும் காரணத்தினால் தாவா சொத்தில் ஏற்பட்ட அனைத்து விதமான கிரைய பத்திரங்களையும் செல்லாது என்று பரிகாரம் கூற வேண்டிய அவசியம் இல்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 2011 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஏற்பட்ட கிரையங்கள் அனைத்தும் மேற்கு பக்கம் ஏற்பட்ட கிரையங்கள் தான் என்றும், வாதியின் அனுபவத்தில் இருக்கும் இடம் எதுவும் தற்போது வரை கிரையம் செய்து கொடுக்கப்படவில்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தையும் ஒன்றாம் வாதியும் கூட்டாக சேர்ந்து கிரையம் பெற்றுள்ளதால், எனக்கு மேற்படி சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, எனக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது. வழக்கு பற்றி எனக்கு வழக்கு நடந்து வரும் காலங்களில் இருந்து தெரியும் என்றும், நான் வழக்கில் தரப்பினராக என்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டி தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டு விட்ட காரணத்தினால், தற்போது வாரிசு அடிப்படையில் தரப்பினராக சேர்க்கப்பட்ட பின் வாதிகளுக்கு சொத்து கிடைக்கக்கூடாது என்று வீனாக பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாதி பங்கு தற்போதும் வாதி அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும் அவர்களுக்கு தான் சொத்து கிடைக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. ஒன்றாம் வாதி எனது தந்தையின் பெயரில் ஏற்படுத்திக் கொண்டதாக சொல்லும் தான

பத்திர ஆவணத்தில் மோசடியாக தயார் செய்து கொடுத்ததில் நானும் எனது மனைவியும் ஒரு அங்கமாக இருந்தோம் என்றால் சரியல்ல.

8. தான பத்திரத்தில் கைரேகை மோசடி சம்பந்தமாக 2ம் வாதி பொது மனிதர்கள் மூலம் என்னிடம் தகவல் சொல்லி சமதானமாக முடித்து கொள்ள கோரியதில் நான் என் மீதும் எனது மனைவி மீதும் குற்றவியல் வழக்கு வந்து விடும் என்பதால் நான் ஒப்புக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த வித உரிமையும் கோராமல் வாதிகளின் உரிமையை ஆட்சேபனை செய்வதில் எந்த வித சட்ட அடிப்படை இல்லை என்றால் சரியல்ல.

**(5 முதல் 8 பிரதிவாதிகள் வாதிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்)**

**மறுவிசாரணை**

இல்லை